2024 ஜூன் 29] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2024) திருத்தப்பட்டவாறு நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது..

சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

(அஆ) தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு

எண் 30/2024), மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2024)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் இதில் கருத்துகளைச் சொல்வதற்கு அனுமதிக்கிறேன். பேரவையில் பேச வரக்கூடிய மாமன்ற உறுப்பினர்கள் அந்தச் சட்டமுன்வடிவு என்ன திருத்தம் சொல்கிறது; வேண்டுமா; வேண்டாமா; இல்லையென்றால் என்ன திருத்த வேண்டும் அவ்வளவுதான். மூன்றே வார்த்தை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாலை நான் இந்த ஆணையத்தின் தலைவர் பதவி காலியாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியபோது உடனடியாக அதை நிரப்புவதற்கு மாண்பமை முதல்வர் அவர்கள் தந்த வழிகாட்டுதல்களின் அடிப்படையிலே துறை விரைவாகச் செயல்பாடு செய்திருக்கிறது. தமிழக அரசின் அணுகுமுறையை நான் பாராட்டுகிறேன். அதே சமயத்தில், 'கள்வனைக் கொண்டு சிலம்பைக் கொண்டு வா' என்பது 'கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வா' என்பதாகப் புரிந்துகொள்ளப்பட்டுவிடக் கூடாது.

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டத் திருத்தம் என்ன சொல்கிறது என்பது குறித்து பேசவும்.

திரு. ம. சிந்தனை செல்வன்: ஆகவே, ஆணையத்தின் தலைவர் வயது 70 என்பதை 75 ஆக உயர்த்துவதற்கான சட்டத் திருத்தமாக

@ 29–6–2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2024 ஜூன் 29] [திரு. ம. சிந்தனை செல்வன்]

இருக்கிறது. நான் சொல்ல விரும்பும் முதல் கருத்து, ஏற்கெனவே ஓய்வு பெற்ற நீதிபதிகள், பணிக்காலத்திற்குப் பிறகு நியமனப் பொறுப்புகளில் வருவது விமர்சனத்துக்குள்ளாகியிருக்கிறது. இரண்டாவதாக, இப்படிப்பட்ட தகுதிவாய்ந்த நீதிபதிகள் இல்லாததால், அந்த இடம் காலியாக இருப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது. இது இரண்டாவது கருத்து. மூன்றாவதாக, தேசிய ஆணையத்தின் Chairman அவருடைய qualification-ல் 'The Members shall be appointed from amongst persons of ability, integrity and standing who have had a record of selfless service to the cause of justice for the Scheduled Castes.' என்றுதான் இருக்கிறது. எனவே, தேசிய ஆணையத்திற்கே ஓய்வு பெற்ற நீதிபதி என்கிற தகுதி வரைமுறை தேவையில்லை என்கிறபோது, இங்கு இவ்வாறு கொண்டு வருவதென்பது நெருக்கடியைத் தருகிறது.

ஆகவே, சட்டமன்றப் பேரவை விதி 133-ன்படி ஒரு திருத்தத்தை முன்மொழிகிறேன். இதில் Chapter-II, Section 3, Sub-section 2(i)(a)-ல் 'the Chairperson, who shall be a retired judge of the High Court belonging to any of the Scheduled Castes or Scheduled Tribes and has special knowledge in matters relating to the Scheduled Castes and Scheduled Tribes' என்று இருக்கிறது. அதை நான் தவிர்க்கச் சொல்லவில்லை. அத்துடன் 'or' என்ற ஒரு வார்த்தையைச் சேர்த்து, கூடுதலாக, அவ்வாறு இயலாதபட்சத்தில், 'or an eminent person who has track record of working for the Rights and Welfare of SC/ST, with legal expertise and special knowledge in matters relating to the Scheduled Castes and Scheduled Tribes' என்கிற திருத்தத்தை முன்மொழிகிறேன். தமிழக அரசு அருள்கூர்ந்து இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். அதை வழிமொழியுங்கள். அவ்வளவுதானே ?

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. சிந்தனை செல்வன் அவர்கள் கூறியிருப்பதை நான்

ஏற்றுக்கொள்கிறேன். அதில் 70 வயதிலிருந்து 75 வயதாக மாற்றுவதற்கான காரணம் என்ன என்பதைச் சொல்லிவிட்டு, இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என நானும் நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில SC/ST ஆணையத்தின் தலைவர் நியமனத் தகுதியில் ஓய்வுபெற்ற நீதிபதி என்பதோடு அல்லாமல், கூடுதலாக ஓய்வு பெற்ற நீதிபதி அல்லது உரிய சட்ட அறிவு பெற்ற மற்றும் SC, ST மக்களின் உரிமைகளுக்காக நீண்டகாலம் பணியாற்றிய அனுபவமுள்ள நபர்களைச் சேர்க்க வேண்டுமென்ற சட்டத் திருத்தம் வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் என்பது Principal Act–ல், அங்கிருக்கக்கூடிய ஓய்வுபெற்ற நீதிபதியின் வயது வரம்பை, 70–லிருந்து 75 ஆக உயர்த்துவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற ஒரு சட்டத் திருத்தம்தான். Principal Act–ல், வேறு எந்த change–ம் செய்வதற்காக இங்கு நாம் கொண்டுவரவில்லை. வழக்கறிஞர் தொழிலில், ஓய்வுபெற்ற நீதிபதியாக இருந்தாலும், மற்றவர்களாக இருந்தாலும் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தில் 80 வயது, 85 வயது முதிர்ந்தவர்கள் சிறந்த முறையில் practice செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். மேலும் சொல்லப்போனால், இது ஆதி திராவிட சமுதாயம் மற்றும் பழங்குடியின மக்களைச் சேர்ந்த அவர்களுடைய நன்மைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட சிறப்பான ஓர் ஆணையம். அவர்களுடைய நலனுக்காகக் கொண்டுவரப்பட்டது. ஆணையத்திற்கு நீதிமன்றத்திற்கான அனைத்து அதிகாரங்களும் இருக்கின்றன.

அழைப்பாணை அனுப்புவது, சாட்சிகளை விசாரிப்பது மற்றும் நீதிமன்றத்திற்குண்டான அனைத்து பணிகளையும் செய்கின்ற பொறுப்பு இந்த ஆணையத்திற்கு இருக்கின்றது. வருகையைக் கட்டாயப்படுத்துவது, உறுதிமொழி எடுத்துக்கொள்ளச் சொல்வது, அவர்கள் வரவில்லையென்றால், அதற்கான காரணங்களைக் கண்டறிவது, ஆவணங்களைக் கேட்டறிவது போன்ற நீதிமன்றத்திற்கான அனைத்து அதிகாரங்களும் இந்த ஆணையத்திற்கு இருக்கின்ற காரணத்தால், இந்த ஆணையத்திற்கு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியை நியமிப்பதே, பொருத்தமான ஒன்றாக இருக்கும். இன்றைக்கு பல நீதிமன்றங்களின் நீதிபதிகள், ஆதி திராவிட சமுதாய மற்றும் பழங்குடியின மக்களைச் சேர்ந்தவர்கள்தான் இதில் நியமிக்கப்படவிருக்கிறார்கள். அவர்கள் சிறந்தவர்கள்.

பிற்பகல் 1-00

இன்றைக்கு அவர்களுக்குக் கூடுதலாக வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, இன்னும் சிறந்த நீதியரசர்களை கூடுதலாக நாம் பயன்படுத்திக்கொள்ளலாம் என்கிற காரணத்திற்காகத்தான் இந்த வயதுவரம்பு உயர்த்தப்பட்டிருக்கிறதே தவிர, வேறு எந்தக் காரணமும் அல்ல. ஏனெனில், உச்ச நீதிமன்றத்தில் 65 வயதிற்கு மேற்பட்டவர்கள்தான் ஓய்வு பெறுகிறார்கள். ஓய்வு பெற்ற நீதிபதிகளை வைப்பதுதான் இங்கே பொருத்தமான ஒன்றாக இருக்கும் என்ற காரணத்தினாலேயே அந்த வயது வரம்பை மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையிலான அரசு உயர்த்தியிருக்கிறது. வேறு எந்தக் காரணமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 செய்திகள். ஒன்று இது legalised ஆன விஷயம் என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்காகத்தான் அவருடைய Secretary இருக்கிறார்கள். இரண்டாவதாக தகுதியான நீதிபதிகள் 70 வயதில் இல்லாததால்தான் வயதை extend செய்து 75 ஆக்கச் சொல்கிறார்கள். வருங்காலங்களில் தகுதியான நீதிபதிகள்

75 வயதில் இல்லையென்றால் நாம் 80 வயது வரை extend செய்ய வேண்டியிருக்கும். ஆகவே, இப்போது இல்லையானாலும், பிறகாவது மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலித்து திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2-ல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2024 ஜூன் 29] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஅ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபொழுது இரண்டு பணிகளுக்குச் செல்லக்கூடியவர்களைக் குறிப்பிட்டு நான் பேசிவிட்டேன். நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. அவற்றை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அவைக் குறிப்பிலிருந்து அவற்றை நீக்கிவிடுகிறேன். நான் அதற்காகத்தான்* short *ஆக* subject*–க்குள் வாருங்கள் என்று சொன்னேன்.*